2022 ஏப்ரல் 25]

அந்தச் சூழ்நிலைகளைக் கருத்திலேகொண்டு, ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜன் அவர்களுடைய கேள்விக்குப் பதில் அளித்ததைப்போல, அங்கே techno-economic feasibility-*யை* study *செய்து, தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சாத்தியக்கூறுகளின் அடிப்படையில்தான் அதுகுறித்து நாம் முடிவு செய்ய முடியும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 166, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

166—

துணை மின் நிலையம்

***9726—திரு. ஆ. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஒன்றியம், சோராஞ்சேரி பகுதியில் 110 K.V. *துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஒன்றியம், சோராஞ்சேரி பகுதியில் 110 KV *திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.*

முற்பகல் 10–25

திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பரிசீலனையில் உள்ளது' என்று சொன்னமைக்காக,*

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, புட்லூர் கிராமம், காக்களூர் கிராமம் இவை இரண்டும் திருவள்ளூர் ஒன்றியம் சார்ந்தவை. அந்த ஒன்றியத்தில் இடம் ஏற்கெனவே இருக்கிறது, சாத்தியக்கூறு இருக்கிறது என்று மின்சாரத் துறையின் சார்பாக 110 KV துணை மின் நிலையம் அமைப்பதற்காக உத்தரவையும் மற்றும் உறுதியையும் தந்திருக்கிறார்கள். ஆனால், இடம் கையகப்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. ஆனால், கிளாம்பாக்கம், வெங்கல் ஆகிய இரண்டு கிராமங்களிலும் இடம் வழங்கப்பட்டுள்ளன. இருந்தாலும், துணை மின் நிலையம் அமைப்பதற்குக் காலதாமதம் ஆகிறது. எனவே விரைவில் துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் கண்டறியப்பட்ட பகுதிகளில், திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. நிருவாகக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர், அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் ஒன்றியம், கீழானூர் கிராமத்தில் 33 KV துணை மின் நிலையம் இருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய வெள்ளியூர், வதட்டூர், கரிகலவாக்கம், விஷ்ணுவாக்கம் ஆகிய கிராமங்களில் தொடர்ச்சியாக மின் அழுத்தக் குறைபாடுகள் இருக்கின்றன. அதனைப் போக்குவதற்காக நீண்ட நெடுங்காலமாக 110 KV துணை மின் நிலையம் வேண்டுமென்ற கோரிக்கை அங்கே வைத்திருக்கின்றார்கள். அது நிறைவேற்றப்படாமலே இருக்கிறது. அதேநேரத்தில், பூந்தமல்லி ஒன்றியத்தில் உள்ள சென்னீர்குப்பம், கூடப்பாக்கம் ஆகிய பகுதிகளிலும் 33 KV துணை மின் நிலையம் இருக்கிறது. அதனையும் 110 KV ஆக மாற்றித் தருவார்களா

2022 ஏப்ரல் 25]

என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூந்தமல்லி தொகுதியில் சீரான மின் விநியோகம் செய்வதற்காக 35 எண்ணிக்கையிலான புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, இப்போது பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்தப் பகுதிகளை ஆய்வு செய்து, தேவை ஏற்படின் நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மனித வாழ்க்கையோடு மின்சாரம் பின்னிப் பிணைந்து, இரண்டறக் கலந்துவிட்ட ஒன்றாக உள்ளது. மின்சார பயன்பாட்டின் அளவு அதிகரித்து வருகிற நிலையில் எங்கள் பெண்ணாகரம் தொகுதியில், கிராமங்கள், மலைப் பகுதிகள் நிறைந்திருக்கிற காரணத்தினால், அங்கு மின்சாரத் தேவையைக் கருத்தில்கொண்டு, இயங்கி வருகிற மின்சார உபகோட்டத்தைக் கோட்டமாக உயர்த்தவும், நான்கு பிரிவு அலுவலகங்களும் துவங்குவதற்கு முறையான கருத்துருக்களும் அனுப்பப்பட்டு, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்னும் நடைமுறைக்கு வராத காரணத்தினால், நடப்பு ஆண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை நடைமுறைக்குக் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரே ஆண்டில் மூன்று புதிய மண்டலங்களை உருவாக்கி, அதனைத் தன்னுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்திருக்கின்றார்கள்.*

அதற்கடுத்து கோட்டங்கள், உபகோட்டங்கள், பிரிவு அலுவலகங்கள் அமைக்க அதற்கான மின் இணைப்பிற்கான கணக்கீடுகள் இப்போது எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால், பெண்ணாகரம் தொகுதியில் கோட்டமாக தொடங்கி வைப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதி என்பது கடல் மட்டத்திலிருந்து 3,500 அடி உயரத்தில் இருப்பதால் ஆண்டு முழுவதும் குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நிலவுகிறது. அதனால், இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் பசுமைக் குடில் அமைத்து, மலர் சாகுபடி செய்து வருகிறார்கள். தளி, ஜவளகிரி மாரண்டஹள்ளி பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் பசுமைக் குடில் அமைத்து மலர் சாகுபடி செய்து வருகிறார்கள். ஆண்டிற்கு ரூ.200 கோடி அந்நிய செலாவணியை ஈட்டி வருகிறார்கள். இந்த விவசாயிகளுடைய மின் பம்ப் செட்டுகளுக்குக் குறைந்த மின்னழுத்தம் காரணமாக மோட்டார்கள் இயங்குவதில்லை. ஆகவே, தளி தொகுதியில் ஒரு 110 KV துணை மின் நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 216 துணை மின் நிலையங்களுக்கான ஒப்புதலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். இந்த ஆண்டு, துறையின் சார்பாக எந்தெந்தப் பகுதிகளில் துணை மின் நிலையங்கள் தேவை என்பது ஆய்வு செய்யப்பட்டு, அதற்குண்டான கணக்கீடுகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற பகுதியில் துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு தேவையேற்படின் துறை நடவடிக்கைகளை எடுக்கும்*

2022 ஏப்ரல் 25]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள்.*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எனது தென்காசி தொகுதியில், சுரண்டை நகராட்சியில் தமிழ்நாடு மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர் அலுவலகம் இயங்கி வருகிறது. அந்தப் பழைய கட்டடம் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் இருக்கின்றது. எனவே, சுரண்டை கிராமத்தில் உப மின் நிலையம் வளாகத்தில் புதிய கட்டடம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்த அலுவலகத்திற்கு மின்சார வாரியத்தின் சார்பாக புதிய கட்டடம் கட்டுவதற்கான ஆய்வுகள் செய்யப்படும். நிதிநிலைமைக்கேற்ப வருங்காலங்களில் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள்.*

முற்பகல் 10—30

திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் காலை வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். சூலூர் தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டையிலிருந்து கேத்தனூர் வழியில் செல்கின்ற* tower line *விவசாய நிலங்களின் வழியாக கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டது. தற்போது அந்தப் பணியினை மீண்டும் விரிவுபடுத்துவதாகக் கூறியிருக்கிறார்கள். விரிவுபடுத்தும்போது அந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை கொடுக்க வேண்டும்*

என்று நமது மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதனை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றோம். எனவே, அந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும் என்று மீண்டும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்த மின்வழித்தடம் அமைக்கும் பகுதிகளில் ஏற்கெனவே உள்ள நடைமுறைகளின்படி விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்தப் பகுதியினைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு முன்னுரிமை கொடுக்கப்படும்; அதற்கான தீர்வுகள் காணப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

167—

மண்பாண்டத் தொழிற்கூடம்

***1816—திரு. A. நல்லதம்பி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், மடவாளம் கிராமத்தில் மண்பாண்டத் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*